வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கனிமொழி கலியபெருமாள்

தேதி : 04.10.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

சிறு-குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கு முக்கிய பங்காற்றி வருவதாக திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

5 சட்டப் பேரவை மற்றும் ஒரு மக்களவைத் தொகுதிக்கு நாளை மறுநாள் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

மத்திய பணியாளர், பொது குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் துறை சார்பில் நாளை புதுடெல்லியில் 17ஆவது ஓய்வூதிய நீதிமன்றம் நடைபெறவுள்ளது.

ஜப்பான் நகோயாவில் சென்ற மாதம் 19ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இன்றுடன் நிறைவடைந்தன.

## சி.பி. ராதாகிருஷ்ணன் (15)

இந்தியா உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாக இருப்பதுடன் தொழில் நுட்பத்திலும், விரைந்து முன்னேறி வருவதாக குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார். அவர் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய நிறுவன செயலர்கள் கழகத்தின் 58-ஆவது நிறுவன நாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும், ஆதரவையும் பெறாமல் தேசம் முன்னேற முடியாது என்றும், இந்தியாவின் கல்வி நிறுவனங்கள், சிறு-குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கு முக்கிய பங்காற்றி வருவதாக திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் சுட்டிக் காட்டினார். மேலும், வலுவான தற்சார்பு இந்தியாவைக் கட்டமைப்பதில், இந்திய

நிறுவன செயலர்கள் கழகத்தின் கூட்டு முயற்சிகள் இந்தியாவை உலகின் தனிப் பெரும் பொருளதாரமாக மாற்றும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

**மக்கள் சேவை மூலமான தேச சேவை - 1 (14)**

**மக்கள் சேவை மூலமான தேச சேவை** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் **சேவைப் பயணம்,** இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. **சேவை மற்றும் நல்லாட்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம்** என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, **சேவா சங்கல்ப் அபியான்** என்னும், இந்த **சிறப்பு தொடரில்** இன்று வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியை நோக்கிய ஒரு சிறப்பு பார்வை குறித்து காண்போம்...

(வாய்ஸ்)

**மக்கள் சேவை மூலமான தேச சேவை 2 வாய்ஸ் (19)**

(வாய்ஸ்)

நாடு சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளுக்குப் பிறகும் பல வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்களில் ரயில் பாதை அமைக்கப்படாமல் இருந்தது. மேலும் காஷ்மீர் பள்ளத்தாக்கு, தேசிய ரயில் சேவையுடன் இணைக்கப்படாமல் இருந்தது. மாநில தலைநகரங்களே இந்த நிலையில் இருந்து வந்தன. இதற்கு வடகிழக்கு மாநிலங்களின் தொலைவே காரணமாக காட்டப்பட்டு வந்தது. ஆனால் தற்போது, அகர்தலா மற்றும் நாகர்லாகுன் ஆகிய நகரங்களுக்கு அகல ரயில் பாதை அமைக்கப்பட்ட நிலையில், கடந்த 2025ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பைராபி-சைராங் ரயில் பாதை திறக்கப்பட்டு ஐசால் நகரம் ரயில்வே நெட்வொர்க்குடன் இணைக்கப்பட்டது. இதன் மூலம் மிசோரம் தனது முதல் ரயில் சேவையைப் பெற்றது. தற்போது இந்தியாவில் அதிவேக வளர்ச்சியடைந்து வரும் பிராந்தியங்களில் வடகிழக்கு மாநிலங்களும் இடம்பெற்றுள்ளன.

ஆனால் காஷ்மீருக்கு இந்த மாற்றம் வர சற்று கூடுதல் அவகாசரம் தேவைப்பட்டது. 28 ஆண்டுகளாக கட்டுமானத்தில் இருந்த உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா ரயில் பாதை உலகின் மிக உயரமான செனாப் ரயில் பாலத்தில் வழியாகச் செல்கிறது. 2025 ஜூன் மாதம் தொடங்கப்பட்ட இந்த ரயில் சேவை, குளிர், அடர் பனி உள்ளிட்ட அனைத்து கால நிலைகளிலும் தங்கு தடையின்றி இயங்குகிறது. ஒரு காலத்தில் செல்வதற்கு கடினமாக

**மக்கள் சேவை மூலமான தேச சேவை - 3 வாய்ஸ் (03)**

இருந்த பகுதிகள் தற்போது நிலப்பரப்பு, தொலைவு என்ற எந்த தடைகளும் இல்லாமல் எளிதில் சென்று சேரக் கூடிய இடங்களாக மாறியுள்ளன என்றால் அது மிகையில்லை.

## இடைத்தேர்தல் (19)

5 சட்டப் பேரவை மற்றும் ஒரு மக்களவைத் தொகுதிக்கு நாளை மறுநாள் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது. தமிழ்நாட்டில், மதுராந்தகம், தாராபுரம், சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி சட்டப்பேரவைத் தொகுதிக்கும், மேற்கு வங்கத்தில் ரெஜி நகர், நந்திகிராம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் அஸ்ஸாமில் Nagaon மக்களவை தொகுதிக்கும் இடைத் தேர்தல் நடைபெறுகின்றன. இன்று மாலை 6 மணி முதல் வாக்குப் பதிவு முடிவடையும் வரை தேர்தல் தொடர்பான பொதுக்கூட்டத்தையோ, ஊர்வலத்தையோ, ஒருங்கிணைக்கவோ அல்லது நடத்தவோ கூடாது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, மற்றும், சமூக வலைதளங்கள் மூலம் தேர்தல் தொடர்பான பிரச்சாரங்களை மேற்கொள்ளக் கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, வாக்காளர்களுக்கு, பணம், பரிசுப் பொருட்கள் வழங்குவது உள்ளிட்ட விதி மீறல்களைத் தடுக்க தேர்தல் பறக்கும் படையினர் தீவிர சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தொகுதிகளிலுள்ள வாக்காளர் அல்லாதோர் இன்று மாலைக்குள் வெளியேறுமாறும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. மேலும், இந்த இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 9ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

ஜிதேந்திர சிங் - 1(13)

மத்திய பணியாளர், பொது குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தலைமையில் நாளை புதுடெல்லியில் 17ஆவது ஓய்வூதிய நீதிமன்றம் நடைபெறவுள்ளது. இது குறித்த கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

ஜிதேந்திர சிங் – 2 வாய்ஸ்(13)

(வாய்ஸ்)

மத்திய பணியாளர், பொது குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் துறை சார்பில் நாளை நடைபெறவுள்ள நீதிமன்றத்தில், மிக மூத்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள 897 குறைகள் தீர்வுக்காக எடுத்துக் கொள்ளப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த மே மாதம் 13ஆம் தேதி நடைபெற்ற 16ஆவது அமர்வில் காணப்பட்ட தீர்வுகள் குறித்த பிரசுரங்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் தொடர்பான பிரச்சனைகள் குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைக் கொண்ட ஒரு கையேடும் வெளியிடப்படவுள்ளன. குறைகேட்பு அமர்வுகள் 2017ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை கிடைக்கப்பெற்ற 28ஆயிரத்து 797 குறைகளில், 20 ஆயித்து 676 குறைகளுக்கு உடனடி தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் 71.79 சதவிகித வெற்றி எட்டப்பட்டுள்ளதாகவும் அமைச்சம் தெரிவித்துள்ளது.

போதை ஒழிப்பு விழிப்புணர்வு (13)

மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் 'மை பாரத்' இயக்கம் சார்பில், **போதையில்லா இளைய சமுதாயம்- வளர்ச்சி அடைந்த பாரதம்** என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட போதை ஒழிப்பு விழிப்புணர்வு நடைபயணம் புதுச்சேரியில் இன்று காலை நடைபெற்றது. கடற்கரை சாலை, காந்தி சிலை அருகில் தொடங்கி, கம்பன் கலையரங்கம் வரை நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நடைப்பயணத்தை துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், போதை ஒழிப்பு விழிப்புணர்வு பதாகைகளை

ஏந்தியபடி பள்ளி, கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். அரசு செயலர் திருமதி முத்தம்மா, துறை இயக்குநர் திரு. சுதாகர், மை பாரத் இயக்கத்தின் புதுச்சேரி பொறுப்பாளர் திரு. த்ரவீன், நாட்டு நலப்பணித்திட்ட புதுச்சேரி ஒருங்கிணைப்பாளர் திரு. சதீஷ் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.

## விளையாட்டு (15)

ஜப்பான் நகோயாவில் சென்ற மாதம் 19ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இன்றுடன் நிறைவடைந்ததாக ஆசிய ஒலிம்பிக் கவுன்சிலின் தலைவர் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். 2030ஆம் ஆண்டு தோஹாவில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தீப்பந்தமும், கொடியும் அந்நாட்டு பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

நிறைவு விழாவில், இரண்டு தங்கப்பதக்கங்களையும், ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் வென்ற துப்பாக்கிச் சுடும் வீராங்கனை நீரு தண்டா மூவர்ணக் கொடையை ஏந்தி இந்திய அணியை வழிநடத்திச் சென்றார். தற்போது நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம் என 85 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் இந்தியா 4ஆவது இடத்தில் உள்ளது.

இந்திய-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி நாளை மறுநாள் லக்னோவில் நடைபெறவுள்ளது.

## வானிலை (12)

மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய தென் தமிழக கடலோர பகுதிகள் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுவதன் காரணமாக இன்று, கோவை, நீலகிரி, தேனி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திருப்பூர், ஈரோடு, சேலம், திருச்சி, அரியலூர், செங்கல்பட்டு, காஞ்சீபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்

கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மீண்டும் தலைப்புச் செய்திகள்**

சிறு-குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கு முக்கிய பங்காற்றி வருவதாக திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

5 சட்டப் பேரவை மற்றும் ஒரு மக்களவைத் தொகுதிக்கு நாளை மறுநாள் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

மத்திய பணியாளர், பொது குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் துறை சார்பில் நாளை புதுடெல்லியில் 17ஆவது ஓய்வூதிய நீதிமன்றம் நடைபெறவுள்ளது.

ஜப்பான் நகோயாவில் சென்ற மாதம் 19ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இன்றுடன் நிறைவடைந்தன.

**இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. SS/KK/VM**

**நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது மாநிலச் செய்திகள்**